நல்லூர் ... நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

## உற்பத்தி எழுச்சி வாரம் ஏப்பிரல் 24இல் ஆரம்பம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் உற்பத்தி எழுச்சி வாரத்தை ஆண்டு தோறும் நடாத்தி வருவது தெரிந்ததே. இவ்வாண்டு சித்திரை 24-ம் திகதி முதல் 30-ம் திகதி வரை இது கொண்டாடப்படவுள்ளது. வளங்களைப் பயன்படுத்துவது தொடர்பான பல்வேறு வகையான போட்டிகளை நடாத்தி பரிசில்கள் வழங்கல், தரிசு நிலங்களை பயிர்ச் செய்கைக்குரிய தாக்கல், குளங்கள்,வாய்க்கால், வீதிகள் திருத்தம் என்பன இவ்வாரத்தில் முக்கிய (4ம் பக்கம் பார்க்க)

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    பங்குனி 28    [10-04-1993]    சனிக்கிழமை    ஓசை 51

# மணலாற்றில் புலிகள் அதிரடித் தாக்கு;

# 20படையினர்பலி; மினிமுகாம் தகர்ப்பு

## 45 நிமிட நேர அகோர சண்டை

[மணலாறு]

மணலாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் மினிமுகாம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித்தாக்குதலின் போது அம் முகாம் முற்றாக அழிக்கப்பட்டது. இத் தாக்குதலில் ஒரு அதிகாரி உட்பட இருபதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப் பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். பல நவீன ஆயுதங்கள் விடுதலைப்புலிகளால் கைப் பற்றப்பட்டன.

சுமார் 45 நிமிடத்திற்கு மேலாக நீடித்த இவ் உக்கிர சண்டையில் பத்து விடுதலைப் புலிகள் வீரச்சாவடைந்தனர்.

மணலாற்றில் உள்ள கென்பாம் இராணுவ முகாமிற்கும் சிலோன் தியேட்டர் இராணுவ முகாமிற்கும் இடையிலுள்ள மினி முகாம் ஒன்றே விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு இலக்கானது. இம்முகாம் சிங்களக் குடியேற்ற வாசிகளின் பாதுகாப்பிற்கென அமைக்கப்பட்டிருந்தது.

வழமையாக பகலில் காவற் கடமையில் ஈடுபடும் இராணுவத்தினர் இரவில், இம் முகாமைவிட்டு பின்வாங்கிச் சென்று காலையில் திரும்பி வருவது வழமையாகும். இவ்வாறாக இம் முகாமிற்கு காவற் கடமைக்கு நேற்றுக் காலை வந்த இராணுவத்தினரே விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலில் சிக்கியவர்கள் ஆகும். காலை 8-15 மணியளவில் ஆரம்பித்த இத் தாக்குதலானது 9-00 மணி வரையும் நீடித்தது.

சுமார் நாற்பத்தி ஐந்து நிமிடங்கள் வரை நீடித்த இம் மோதலின்போது மினிமுகாம் முற்றாக விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டது.

இதேவேளை கென்பாம், சிலோன்தியேட்டர் ஆகிய இரு முகாம்களில் இருந்தும் கவச வாகனங்கள் சகிதம் உதவிக்கு வந்த இராணுவ அணிகள்மீதும் விடுதலைப் புலிகளின் வேறு அணிகள் தாக்குதல் நடத்தின. இத்தாக்குதலில் டாங்கிகளும், பீரங்கி பொருத்தப்பட்ட உலங்குவானூர்திகளும் பயன்படுத்தப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. அத்தோடு இராணுவ முகாம்களில் இருந்து பலத்த எறிகணைவீச்சும் இடம்பெற்றது.

இம்மோதலில் ஓர் இராணுவ அதிகாரி உட்பட 19 படையினர் கொல்லப்பட்டதாகச் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## சுற்றி வளைப்பில் 10 பேர் கைது

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை பகுதியில் இருக்கும் தமிழ்க்கிராமங்களை இராணுவத்தினர் நேற்று அதிகாலை சுற்றி வளைத்து சோதனையில் ஈடுபட்டனர். இச் சுற்றி வளைப்பின்போது பத்து தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## 'சங்கு' ராணுவ நடவடிக்கை மன்னாரில் ஆரம்பம்

### இராணுவ வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் 'சங்கு' எனும் பெயரிடப்பட்ட இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் செய்திவெளியிட்டுள்ளன. அச் செய்தியில் மேலும் முள்ளிக்குளம் மறிச்சுக்கட்டி பகுதிகளில் பீரங்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிக்கொப்டர்களின் உதவியுடன் தாக்குதல் நடாத்தப்பட்டு வருவதாகவும் முள்ளிக்குளம் பகுதியில் தரையிறங்கிய கடற்படையினரும் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மாவிலாச்சிய இராணுவ முகாமில் இருந்தும் கடற்பரப்பிலிருந்தும் எறிகணைத் தாக்குதல் நடாத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## புத்தாண்டு காலத்தில் தாக்குதல் இல்லையாம்

(கொழும்பு)

புதுவருடத்தை முன்னிட்டு படையினர் தாக்குதல் நிறுத்தம் செய்வது குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை. எனினும் படையினர் வழமையான நடவடிக்கைகளை அத்தினத்தில் மேற்கொள்வர் என கூட்டுப்படைத் தலைமையக பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன தெரிவித்தார்.

### ரணில் தெரிவிப்பு

புலிகள் படையினர் மீது தாக்குதல் நடத்தினால் திருப்பித் தாக்குவோம் என்றும் பிரிகேடியர் அங்கமன கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இது குறித்து செய்தியாளரிடம் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ரணில் விக்ரமசிங்க (3 ஆம் பக்கம் பார்க்க)

## பத்து போராளிகள் வீரச்சாவு

மணலாற்றில்விடுதலைப்புலிகள் சிறிலங்கா இராணுவத்தினரின் மினிமுகாம் ஒன்றின் மீது நேற்று மேற்கொண்ட

★ லெப்டினன்ட் தமிழ்க்கோ/ கேதுராஜ் சந்திரசேகரம் உதயகுமார். தும்பங்கேணி, திக்கோடை மட்டக்களப்பு

★ லெப்டினன்ட் கலைக்

★ லெப்டினன்ட் அரிமாநம்பி/கிலோஜன் காசுபதி மனோகரன் இலுப்படிச்சேனை, பன்குடாவெளி, மட்டக்களப்பு.

## மூன்று மாதங்களின் பின்பே

## வீரச்சாவு



2ஆம் லெப். பாப்பா



2ஆம் லெப். நவக்குமார்



மணலாற்றில் உள்ள கென்பாம் இராணுவ முகாமிற்கும் சிலோன் தியேட்டர் இராணுவ முகாமிற்கும் இடையிலுள்ள மினி முகாம் ஒன்றே விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு இலக்கானது. இம்முகாம் சிங்களக் குடியேற்ற வாசிகளின் பாதுகாப்பிற்கென அமைக்கப்பட்டிருந்தது.

வழமையாக பகலில் காவற் கடமையில் ஈடுபடும் இராணுவத்தினர் இரவில், இம் முகாமைவிட்டு பின்வாங்கிச் சென்று காலையில் திரும்பி வருவது வழமையாகும். இவ்வாறாக இம் முகாமிற்கு காவற் கடமைக்கு நேற்றுக் காலை வந்த இராணுவத்தினரே விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலில் சிக்கியவர்கள் ஆகும். காலை 8-15 மணியளவில் ஆரம்பித்த இத் தாக்குதலானது 9-00 மணி வரையும் நீடித்தது.

சுமார் நாற்பத்தி ஐந்து நிமிடங்கள் வரை நீடித்த இம் மோதலின்போது மினிமுகாம் முற்றாக விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டது.

இதேவேளை கென்பாம், சிலோன்தியேட்டர் ஆகிய இரு முகாம்களில் இருந்தும் கவச வாகனங்கள் சகிதம் உதவிக்கு வந்த இராணுவ அணிகள்மீதும் விடுதலைப் புலிகளின் வேறு அணிகள் தாக்குதல் நடத்தின. இத்தாக்குதலில் டாங்கிகளும், பீரங்கி பொருத்தப்பட்ட உலங்குவானூர்திகளும் பயன்படுத்தப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. அத்தோடு இராணுவ முகாம்களில் இருந்து பலத்த எறிகணைவீச்சும் இடம்பெற்றது.

இம்மோதலில் ஓர் இராணுவ அதிகாரி உட்பட 19 படையினர் கொல்லப்பட்டதாகச் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

# பத்து போராளிகள் வீரச்சாவு

மணலாற்றில்விடுதலைப்புலிகள் சிறிலங்கா இராணுவத்தினரின் மினிமுகாம் ஒன்றின் மீது நேற்று மேற்கொண்ட அதிரடித்தாக்குதலில் 10 போராளிகள் வீரச்சாவு அடைந்தனர் இவர்களுக்குதமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்

★ கப்டன் அதியமான்/வெஸ்ரர் கதிரவேல் ஞானசேகரம். அடம்பன், பரப்புக்கடந்தான் மன்னார்.

★ லெப்டினன்ட் திருவள்ளுவர்/குணபால் சரவணமுத்து ஜெயக்குமார் விபுலானந்தர் வீதி, மாதகல்.

★ லெப்டினன்ட் தமிழ்க்கோ/கேதுராஜ் சந்திரசேகரம் உதயகுமார். தும்பங்கேணி, திக்கோடை மட்டக்களப்பு

★ லெப்டினன்ட் கலைக்கோன்/ஜெயந்தன். ஜெயக்கொடி ஜெயரூபன் உரும்பராய் மேற்கு உரும்பராய்

★ லெப்டினன்ட் தொல்காப்பியன்/சூரி சுப்பிரமணியம் சோமசுந்தரம், இல. 82 இரண்டாம் கட்டை, நல்லூர்.

★ லெப்டினன்ட் அழகுமுத்து/சாள்ஸ் சீனத்தம்பி கோணேசநிதி விபுலானந்தர் வீதி, வாழைச்சேனை, மட்டக்களப்பு.

★ லெப்டினன்ட் அரிமாநம்பி/கிலோஜன் காசுபதி மனோகரன் இலுப்படிச்சேனை, பன்குடாவெளி, மட்டக்களப்பு.

★ 2ஆம் லெப்டினன்ட் சந்திரன் வேலாயுதம் ஈஸ்வரன் நாவலர் வீதி, நெடுங்கேணி முல்லைத்தீவு.

★ 2ஆம் லெப்டினன்ட் குந்தவி செல்லத்துரை விஜயலட்சுமி வட்டுக்கோட்டை கிழக்கு, சித்தங்கேணி. (காரைநகர்)

★ வீரவேங்கை வரணி வெள்ளையப்பன் சிவானந்தன் கந்தசாமி கோயில்வீதி, நெடுங்கேணி, முல்லைத்தீவு.

# கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(மணலாறு)

மணலாறில் நேற்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மினிமுகாம் தகர்ப்பின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| ஏ. கே. எல். எம். ஜி. | — 04 | தொலைநோக்கி | — 01 |
| ரி56-2 | — 05 | டப்பி மிதிவெடி | — 18 |
| ரி56-1 | — 04 | கத்தி | — 02 |
| ரி56 | — 04 | வோக்கி | — 01 |
| ரி81 | — 01 | மில்றி பெலிற் | — 06 |
| நடுத்தர ரவை லிங்குடன் | — 1418 | பாக் | — 04 |
| நடுத்தர ரவை | — 2093 | சிவில் பாக் | — 04 |
| புதிய ரக கைக்குண்டு | — 31 | தண்ணீர்கான் | — 01 |
| ரி56 ரவைக்கூடு | — 37 | தண்ணீர்கான் கோல்சர் | — 02 |
| ரி81 ரவைக் கூடு | — 02 | மில்றி சூ (சோடி) | — 03 |
| ஏகே.எல்.எம்.ஜி. ரவைக்கூடு | — 06 | மழைக்கவசம் | — 04 |
| ஏகே. கோல்சர் | — 18 | தலைக்கவசம் | — 08 |

# கிளாலி கடற்பரப்பிலிருந்து கடற்படை தாக்குதல்

கிளாலிக் கடல் ஏரியில் நேற்று காலை 8-30 மணியளவில் கடல் படையினர் படகில் இருந்து 50 கலிபர் தாக்குதல்களை கிளாலி, கச்சாய் கெற்பேலி, அல்லிப்பளை கரையோரப் பகுதிகளை நோக்கி தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதன் சேதவிபரம் தெரியவில்லை. மீன் பிடிக்கச் சென்றவர்கள் மீது துப்பாக்கிபிரயோகம் செய்யப்பட்டதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. (86)

# சேலம் மத்திய சிறையிலிருந்து புலி உறுப்பினர் தப்பினார்

## தமிழக பொலிஸார் தெரிவிப்பு

(சென்னை)

சேலம் மத்திய சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகள் உறுப்பினர் ஒருவர் சிறையிலிருந்து தப்பிச் சென்றுவிட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவரை கைது செய்யும் முகமாக தமிழகமெங்கும் பொலிஸார் உஷார்படுத்தப் பட்டுள்ளதாக சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

# இன்று சார்க் மாநாடு

(டில்லி)

தென்னாசிய நாடுகளின் ஒத்துழைப்பு அமைப்பான சார்க் அமைப்பின் மாநாடு இன்று பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் ஆரம்பமாகின்றது.

கடந்த டிசம்பரில் நடைபெற்றிருக்க வேண்டிய இம் மாநாடு அயோத்தி பிரச்சினையை அடுத்து ஒத்திவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது

இரு தடவைகள் ஒத்திவைக்கப்பட்ட பின்னர் இன்று ஆரம்பமாகும் இம் மாநாடு இரு நாள் மட்டுமே நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## சுற்றி வளைப்பில் 10 பேர் கைது

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை பகுதியில் இருக்கும் தமிழ்க்கிராமங்களை இராணுவத்தினர் நேற்று அதிகாலை சுற்றி வளைத்து சோதனையில் ஈடுபட்டனர். இச்சுற்றி வளைப்பின்போது பத்து தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பகுதிகளில் பீரங்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிக்கொப்டர்களின் உதவியுடன் ...ணைத் தாக்குதல் நடாத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# புத்தாண்டு காலத்தில் தாக்குதல் இல்லையாம்

## ரணில் தெரிவிப்பு


(கொழும்பு)

புதுவருடத்தை முன்னிட்டு படையினர் தாக்குதல் நிறுத்தம் செய்வது குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை. எனினும் படையினர் வழமையான நடவடிக்கைகளை அத்தினத்தில் மேற்கொள்வர் என கூட்டுப்படைத் தலைமையக பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன தெரிவித்தார்.

புலிகள் படையினர் மீது தாக்குதல் நடத்தினால் திருப்பித் தாக்குவோம் என்றும் பிரிகேடியர் அங்கமன கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இது குறித்து செய்தியாளரிடம் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ரணில் விக்ரமசிங்க

( 3 ஆம் பக்கம் பார்க்க )



2ஆம் லெப். நவக்குமார்



வீரவேங்கை தேவதாஸ் (தேவகுமார்)

26-03-93 அன்று மட்டக்களப்பு அலி ஓடை காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதலில் 2ஆம் லெப்டினன்ட் பாப்பா (தர்மலிங்கம் பிரசாத் மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோ

(4ஆம் பக்கம் பார்க்க)

# மூன்று மாதங்களின் பின்பே பூநகரி பாதை திறப்பு

## பிரட்மன் வீரக்கோன் தெரிவிப்பு

பூநகரி பாதையைப் போக்குவரத்திற்காகத் திறந்துவிடுவதற்கு இன்னும் மூன்று மாதங்கள் பிடிக்கும் என ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன்வீரக்கோன் தெரிவித்தார்.

இப்பாதைதிறப்பதுதொடர்பாக ஐ. நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இப்பாதைதிறப்பதுதொடர்பாக ஐ. நா. அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலய கொழும்பு வதிவிடப் பிரதிநிதி யாழ். வந்து புலிகளின் பிரதிநிதிகளுடன் பேசியதும் பின்னர் இதுகுறித்து ஜெனீவாவிற்கு அறிவித்ததும் தெரிந்ததே.

# வீரப்பனின் கண்ணிவெடிக்கு பொலிஸார் உட்பட 22 பேர் பலி

## தமிழக, கர்நாடக அரசுகள் அதிர்ச்சி

(சென்னை)

சந்தனக்கட்டை கடத்தல் வீரப்பனைப் பிடிக்கச்சென்ற சிறப்புக் காவல் படையினர் நிலக்கண்ணிவெடியில் சிக்கியதில் இருபத்திரண்டு பேர் பலியாகினர். பதினான்கு பேர் படுகாயமடைந்தனர். இச்சம்பவம் நேற்று இடம்பெற்றது. இச்சம்பவத்தால் தமிழக, கர்நாடக அரசுகள் அதிர்ச்சியடைந்துள்ளன.

கர்நாடக மாநில எல்லைக்கு அருகே வீரப்பன் நடமாடுவதாகக் கிடைத்த தகவலை அடுத்து இச்சிறப்புக் காவல் படையினர் தமிழ்நாடு காவல் துறைக் கண்காணிப்பாளர் கோபாலகிருஷ்ணன் தலைமையில் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கண்ணிவெடிச் சம்பவத்தில் கொல்லப்பட்டோரில் 5 பேர் தமிழ்நாடு பொலிசார், 2 பேர் வனத்துறையினர் என தெரிவிக்கப்படுகிறது. காவல் துறைக் கண்காணிப்பாளர் கோபாலக்கிருஷ்ணன் உட்பட 6 தமிழ்நாடு பொலிசாரும், 6 கர்நாடகப் பொலிசாரும், துப்புக்கொடுப்பவர்கள் இருவரும் காயமடைந்தனர்.

வீரப்பனைப் பிடிப்பதற்காக தமிழ்நாடு, கர்நாடக அரசுகள் இச் சிறப்புக் காவல்படையை அமைத்துள்ளன.

இச்சம்பவம் குறித்து தமிழ்நாடு, கர்நாடக முதலமைச்சர்கள் அதிர்ச்சியடைந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இச்சம்பவம் குறித்து கருத்து வெளியிட்ட

(3 ஆம் பக்கம் பார்க்க)

# "ரைம்ஸ்" நிறுவனத்தில் பொலிஸார் விசாரணை

[கொழும்பு]

இராணுவக் கட்டமைப்பில் உயர்மட்ட அதிகாரிகள் மத்தியில் நிலவும் கருத்துவேறுபாடுகளை வெளியிட்ட ரைம்ஸ் பத்திரிகை விசாரணைக்கு உட்படுத்தப் பட்டதாகத் தெரியவருகிறது.

புலனாய்வுப் பொலிஸார் ரைம்ஸ் காரியாலத்துக்குச் சென்று செய்தி வழங்கியவரின் பெயரைத் தரும்படி கேட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. செய்தியின் மூலத்தை வெளியிட மறுத்ததும் புலனாய்வுப் பொலிஸார் அங்கிருந்து வெளியேறிச் சென்றார்கள்.

பாதுகாப்புச் செயலாளராக கடமையாற்றி அவுஸ்ரேலியாவுக்கு உயர்ஸ்தானிகராகப் போக இருக்கும் ஜெனரல் சிறில் ரணதுங்க இராணுவத் தலைமையைக் ண்டித்து செய்தி வெளியிட்டது. தொடர்ந்தே பாதுகாப்பு வட்டாரங்களில் சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### பாதுகாத்துக் கொள்ளுங்கள்

பெறுமதிமிக்க உங்கள் வீடியோ படச்சசட்டுகள் பங்கஸ், தூசி படிந்துள்ளதா? மேலும் படிந்து பழுதடையமுன் அதற்கென தயாரிக்கப்பட்ட கருவி மூலம் சிறந்த முறையில் துப்பரவு செய்துகொள்ள வீடியோ ஸ்ரார் இல. 7/6, பிறவுண் வீதி, முதலாம் லேன் யாழ்ப்பாணம். (4481)

### மழலை மேதைகள் போட்டி

பாலர் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் கற்பிக்கும் பாலர்கள் மட்டும் பங்கு பற்றலாம். பரிசுகள் வழங்கப்படும். சனி, ஞாயிற்றுக்கிழமையில் தொடர்பு கொள்ளவும். பாலர் ஆசிரியர் சங்கம் உயர் கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (4084)

### செந்தமிழ் பாட்டு இசை நிகழ்ச்சி

யாழோசை மன்றக் கலை மேம்பாட்டிற்காக யாழோசையினருடன் பல பாடகர்கள், பாடகிகள் பங்கேற்று சிறப்பிக்கவுள்ளனர் இந்நிகழ்ச்சி யாழ் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. நுழைவாயில் ரிக்கெட்டுக்களை யாழ். பூபாலசிங்கம்புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.(4640)

### ஜெசித்தாரா உணவகம்

நீங்கள் சுவையான உணவை எங்கும் உண்ணலாம். நாங்கள் உங்கள் உணவு வகைகளுக்கு மேலும் சுவையூட்டுகின்றோம். வந்து பரீட்சித்துப் பாருங்கள். ஜெசித்தாரா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி. (சி/ 6358)

### விற்பனைக்குண்டு

பிறவுண் பேட்டுக் குஞ்சு உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு:- மல்லிகாபதி, மானிப்பாய். (4645)

### உங்களை அழைக்கின்றது

யோ.எகட்டனின் ஜெசித்தாரா உணவகம் சுண்டுக்குளி மகளிர், கல்லூரிமுன்ஒழுங்கை. மதிய உணவுப் பாசல்கள் பகல் 11/30மணி முதல் பெற்றுக் கொள்ளலாம் எங்களுக்குமன்

---

## ஏப்ரல் 10 முதல்

க.பொ.த சாதாரணதரம் O/L

பகல்முழுநேரவகுப்பு

யுனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

சி-(6337)

---

O/L DAY CLASSES ஆரம்பம்: 10-04-93 காலை 8.00 மணி

✻ O/L EVENING CLASSES (மாலை நேர வகுப்பு)

பிரிவு111 ஆரம்பம் : 10-04-93 மாலை3.00மணி

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி/6353)

---

## ஏப்ரல் 10 முதல்

# யுனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

# A/L-95

இரசாயனவியல்

திரு.மகாதேவா

பௌதீகவியல்

திரு.வர்ணம்

---

## ஜெசித்தாரா உணவகம்

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாராவின் சுமிகு சுவையான உணவுப் பார்சல்கள் பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் 3.30மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

விலை விபரம் :

| | | |
|---|---|---|
| மரக்கறி | - | 24.50 |
| மீன் | - | 28.50 |
| இறைச்சி | - | 29.50 |

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி.

எமக்கு வேறு கிளைகள் இல்லை.

(சி-6367)

## உணவு பரிமாறும் சேவை

எவ்வகையான வைபவங்களானாலும் உங்கள் மேலைத்தேய, கீழைத்தேய உணவு வகைகள், சிற்றுண்டிகளுக்கு வைபவம் நடைபெறும் இடத்தில் பரிமாறும் சேவையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:

முகாமையாளர்

ஜெசித்தாரா


சுண்டுக்குளி மகளிர்

கல்லூரி முன் ஒழுங்கை,

சுண்டுக்குளி.

(சி-6366)

## 31-ம்நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்:
20. 01. 1915

மறைவு:
12. 03. 1993

அமரர்

**சிற்றம்பலம் உமாபதிராஜா**

[சித்தப்பா]

உள்ளத்தில் பொய்யாதொழின் உலகத்தார்
உள்ளத்தில் என்றும் உளர்

என்றதற்கிணங்க, வாழ்ந்து இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் ஈமக் கிரியைகளில் சமுகம் அளித்தவர்களிற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது இல்லத்தில் 11. 04. 1993 நாளை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கிழக்கு றோட்,
வேம்பா,
வல்வெட்டித்துறை.

- குடும்பத்தினர்

[4653]

5ஆம் ஆண்டு

---

## அவசர பொதுக்கூட்டம்

தென்மராட்சி தனியார் கல்விநிறுவன ஒன்றியத்தின் அங்கத்தவர்களுக்கான மேற்படி பொதுக்கூட்டம் 11-4-93 ஞாயிறு பி.ப 3-00 மணிக்கு யா/சாவ. இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். விடுமுறைக் கால வகுப்புக்கள் தொடர்பாக அவசர கலந்துரையாடலில் தவறாது அனைவரும் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

செயலாளர்,
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
தென்மராட்சி கோட்டம்

10-4-93 (3391)

## நினைவு கூருகின்றோம்... 1993-04-10

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்காப் படையினரால் காவல் நிலையத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட பொதுமகன் உட்படப் படுகொலை செய்யப்பட்ட 8 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு கடவானைப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட முற்றுகையின் போது வீரச்சாவெய்திய -

2-ம் லெப். மணாளன் [தியாகராசா குகன் - சிப்பித்திடல், தம்பலகமம் - திருமலை]

ஜானி [செபஸ்ரியான் ஜெயராசா - சின்னயாழ், வெள்ளைமணல், கிண்ணியா - திருமலை]

ராஜ்குமார் [கந்தசாமி சச்சிதானந்தம் – ஆலங்கேணி, கிண்ணியா - திருமலை]

அர்ச்சுனா [வைரமுத்து கனகரத்தினம் - ஆலங்கேணி கிண்ணியா - திருமலை]

வேராவில் இந்தியப் படையினர் மற்றும் தேச விரோத சக்திகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய -

சின்னரவி [ஆறுமுகம் புவனேஸ்வரன் - முள்ளி ஒழுங்கை, அரியாலை - யாழ் ]

மட்டு - பெரியபுல்லுமலைப் பகுதியில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு அடித்துக் கொலை செய்யப்பட்டு எமைப் பிரிந்த -

ஹாசன் [பெ. குமாரவேல் - வேலைத்தோட்டம் - பதுளை]

இதே பகுதியில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு எரித்துக் கொலை செய்யப்பட்டு எமைப் பிரிந்த -

தயா [சா. தியாகராசா - இலுப்பையடிச்சேனை - மட்டு.]

1991 ஆம் ஆண்டு மட்டு - தொப்பிக்கல் மலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகை நடவடிக்கையினால் ஏற்பட்ட சமரின்போது வீரச்சாவெய்திய போராளிகளின் புகழுடல்களை மீட்கும் போரில் வீரச்சாவெய்திய -

ராஜேந்திரன் [வேலாயுதம் சுந்தரராஜன் - பொத்துவில் - அம்பாறை]

கப்டன் சங்கர் [முருகையா சுந்தரலிங்கம் - கறுவாக்கேணி வாழைச்சேனை - மட்டு.]

கப்டன் அமுதன் [கறுவல்தம்பி நவரத்தினம் - கிரான் - மட்டு.]

லெப். ரொமேஸ் [கந்தப்பர் கதிரவேல் - வந்தாறுமூலை - மட்டு.]

2-ம் லெப். மாவி [வல்லிபுரம் சிவநோக்கம் - திருப்பழுகாமம் - மட்டு ]

கிரி [ — சிவயோகநாதன் - நாவற்குடா - மட்டு.]

அமல்ராஜ் [மயில்வாகனம் இராஜேந்திரன் - வெல்லாவெளி - மட்டு.]

செல்வரூபன் (பொன்னையா புண்ணியமூர்த்தி- இலுப்பையடிச்சேனை-மட்டு)

நிமால் (-யோகன்-நாவற்குடா-மட்டு)

ராவ் (தம்பிப்பிள்ளை ரவீந்திரநாதன்-முறக்கொட்டாஞ்சேனை-மட்டு)

எங்கும் உண்ணலாம். நாங்கள் உங்கள் உணவு வகைகளுக்கு மேலும் சுவையூட்டுகின்றோம். வந்து பரீட்சித்துப் பாருங்கள். ஜெசித்தாரா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி. (சி/ 6358)

## விற்பனைக்குண்டு

பிறவுண் பேட்டுக் குஞ்சு உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு:- மல்லிகாபதி, மானிப்பாய். (4645)

## உங்களை அழைக்கின்றது

யோ.எகட்டனின் ஜெசித்தாரா உணவகம் சுண்டுக்குளி மகளிர், கல்லூரிமுன்ஒழுங்கை. மதிய உணவுப் பாசல்கள் பகல் 11/30மணி முதல் பெற்றுக் கொள்ளலாம். எங்களுக்குமுன் கூட்டியே அறிவித்தால் நேரடியாக அனுப்பி வைக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு: முகாமையாளர் ஜெசித்தாரா-சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, (சி 6357)

## சேவை

றெனி மூக்குக்கண்ணாடியகம் உங்கள் கண்களை பரிசோதித்து கண்ணாடி சரியாகவழங்கப்படும். இல. 288, நாவலர் வீதி, ஆனைப்பந்தி (யாழ் தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (சி/6356)

## அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி வணிக மன்றத்தின் நூல் வெளியீட்டு நிதிக்கான அதிர்ஷ்ட இலாபச்சீட்டிழுப்பு முடிவுகள் 1-ம் பரிசு 1740 2-ம பரிசு 637, 3-ம் பரிசு 2253 மேற்படி பரிசில்கள் 14-4-1993 புதன் கிழமை காலை 10-00 மணிக்கு பாடசாலை காரியாலயத்திற் பெற்றுக் கொள்ளலாம். நன்றி (4655)

## Personal Classes

Basic English, General English, Advanced English இன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகின்றன. க. சபாநாயகம் பிள்ளையார் ஒழுங்கை, திருநெல்வேலி. (4651

## உடன் சந்திக்கவும்

ஜாதகம் எழுத, விவாகப் பொருத்தம் பார்க்க, அதிர்ஷ்ட எண்களில் பெயரமைக்க, உங்கள் எதிர்காலம்பற்றி அறிவதற்கு வேலணை சோதிடர் V.A. சிவராசா, 152B அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (4657)

# யுனிவேர்சல்

## கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

# A|L-95

இரசாயனவியல்
## திரு.மகாதேவா
பௌதீகவியல்
## திரு.வர்ணம்
தாவரவியல்
## திரு.ஐங்கரநேசன்
விலங்கியல்
## திரு.கெங்காதரன்
தூய/பிரயோககணிதம்
## திரு.கிருஸ்ணா

(சி-6339)

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

## 95 கலை, வர்த்தக வகுப்புக்கள்

ஆரம்பம் 10-4-93, 10-00 மணி

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — திரு. தேவா |
| கணக்கியல் | — திரு. S.K. பிரபாகரன் |
| அளவையியல் | — திரு. விக்கி |
| தமிழ் | — திரு. குழந்தை |
| இந்துநாகரிகம் ) இந்துசமயம் ) | — திரு காரைசுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — திரு. குணராஜா |
| அரசியல் | — திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — திரு. சிறிதரன் |

ஃ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
ஃ அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் முதல் 200 மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

(சி-6335)



## உமாபதிராஜா

[சித்தப்பா]

உள்ளத்தில் பொய்யாதொழின் உலகத்தார்
உள்ளத்தில் என்றும் உளர்

என்றதற்கிணங்க, வாழ்ந்து இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் ஈமக் கிரியைகளில் சமூகம் அளித்தவர்களிற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது இல்லத்தில் 11. 04. 1993 நாளை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கிழக்கு றோட்,
வேம்பா,
வல்வெட்டித்துறை.

- குடும்பத்தினர்

[4653]

## 5 ஆம் ஆண்டை நினைவு கூருகின்றோம்



## பூபதி கணபதிப்பிள்ளை

அன்னை பூபதியே அணையா விளக்கே
மண்ணை நேசிக்க எம்மை விட்டே
விண்ணையடைந்த பெருமையுணர்ந்தே
கண்குவளை மலர்விட்டு நேசித்தோம்
பூசித்தோம்.

கைத்தொழில் வர்த்தக சங்கம்,
சாவகச்சேரி

(3390)

றுகை நடவடிக்கையினால் ஏற்பட்ட சமரின்போது வீரச்சாவெய்திய போராளிகளின் புகழுடல்களை மீட்கும் போரில் வீரச்சாவெய்திய -

ராஜேந்திரன் [வேலாயுதம் சுந்தரராஜன் - பொத்துவில் - அம்பாறை]

கப்டன் சங்கர் [முருகையா சுந்தரலிங்கம் - கறுவாக்கேணி வாழைச்சேனை - மட்டு.]

கப்டன் அமுதன் [கறுவல்தம்பி நவரத்தினம் - கிரான் - மட்டு.]

லெப். ரொமேஸ் [கந்தப்பர் கதிரவேல் - வந்தாறுமூலை - மட்டு.]

2-ம் லெப். மாவி [வல்லிபுரம் சிவநோக்கம் - திருப்பழுகாமம் - மட்டு ]

கிரி [ — சிவயோகநாதன் - நாவற்குடா - மட்டு.]

அமல்ராஜ் [மயில்வாகனம் இராஜேந்திரன் - வெல்லாவெளி - மட்டு.]

செல்வரூபன் (பொன்னையா புண்ணியமூர்த்தி- இலுப்படிபயடிச்சேனை-மட்டு)

நிமால் (-யோகன்-நாவற்குடா-மட்டு)

ராவ் (தம்பிப்பிள்ளை ரவீந்திரநாதன்-முறக்கொட்டாஞ்சேனை-மட்டு)

ஜெயவேந்தன் (மாணிக்கம் மகாலிங்கம்-கொம்மாந்துறை-மட்டு)

அசோக் (செல்வராஜா நிர்மலராஜ்-வந்தாறுமூலை-மட்டு)

அல்பேட் (சின்னப்பர் பிரான்சிஸ்-பதுளை-மலையகம்]

மன்னார்-மாந்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய

நாயகன் [தெட்சணாமூர்த்தி சுகிர்தன்-கன்னன்குடா-மட்டு]

விஜயன் [சின்னத்தம்பி முருகமூர்த்தி-கோயில் போரதீவு-மட்டு]

2-ம் லெப். துரைக்குட்டி [அடைக்கலம் தொம்மை-கற்கடந்தகுளம், வங்காலை-மன்னார்]

யாழ்-காரைநகர்ப்பகுதியில் சிறிலங்காக் கடற்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

லெப்.ரகுராம் [பழனிவேல் நந்தவரதன்-குலனையூர், அராலிவடக்கு-வட்டுக்கோட்டை யாழ்]

லெப்.குட்டி [செல்லையா இராஜேந்திரன்-நவக்கிரி, புத்தூர்-யாழ்]

இதே பகுதியில் இதே சம்பவத்தில் விழுப்புண் அடைந்த நிலையில் வீரச்சாவெய்திய.

நேரு (பரராஜசிங்கம் குகநாதன்-புத்தூர் கிழக்கு, புத்தூர்-யாழ்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட மயிலவெட்டுவானைச் சேர்ந்த தமிழ் இளைஞன் மற்றும் ஐயங்கேணி வாசிகளான 2 இளைஞர்கள் உட்பட 3 தமிழர்கள் மற்றும் சித்தாண்டியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1992 ஆம் ஆண்டு மட்டு புனாணையில் அம்முகாமிலிருந்து தேக்கஞ்சோலை காவலரண் நோக்கிச்சென்ற இராணுவ ரோந்து அணிமீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலின்போது ஏற்பட்ட நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய

சகாதேவன் (சிவலிங்கம் புவனேந்திரன்-அரசடித்தீவு மட்டு)

மட்டு-பிள்ளையாரடித்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய)

குகராஜன்/ரமேஸ் (சந்திரசேகரம்பிள்ளை உதயன்-இருதயபுரம்-மட்டு]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-6372)

நல்லூர் ... நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

குரங்கை வைத்து வளர்ப்பவன் அது உடைக்கும் கண்ணாடிக் கோப்பைகள் செலவை ஏற்றுக்கொள்ள சித்தமாய் இருக்கவேண்டும்.

— ஜோன் ஸெல்டன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 10-04-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

# முரண்பாடுகள் தோல்வியின் வெளிப்பாடு

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர், இன்று பேரினவாதிகளுக்கு பெரும் விசனத்தையும், ஏமாற்றத்தையும் அளித்துள்ளது. இதற்கு புலிகளுடனான போரில் எதிர்பார்த்த வெற்றியை இலகுவில் ஈட்ட முடியாமல் போய் விட்டமையும், புலிகளுக்கு எதிரான போர் முறைத் திட்டம் ஒன்றை இராணுவத் தலைமைப் பீடத்தினால் வகுக்க முடியாமல் போய் விட்டதுமே காரணமாகும்.

''பத்து வருடங்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தம் செய்த பின்னரும் புலிகளுக்கு எதிரான யுத்த தந்திரோபாயம், மற்றும் யுத்த நுட்பம் குறித்து சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் மத்தியில் அபிப்பிராய பேதம் நிலவுவதாகவும், இதனால் சிறிலங்கா இராணுவத்தால் புலிகளுக்கு எதிரான ஒரு யுத்த தந்திரோபாயத்தை வகுக்க முடியாமல் உள்ளது'' என்பதே இன்று சிங்கள பேரினவாதிகள் மத்தியிலுள்ள மனக்குறையாகும்.

ஆனால், சிங்களப் பேரினவாதிகளுக்கு இவ் ஆதங்கம் இரண்டாம் கட்ட ஈழப்போர் 1990-ல் ஆரம்பித்தபோது ஏற்படவில்லை. அதன் பின்னர், 1991ஆம் ஆண்டிலும் இவ் ஆதங்கம் பெரியளவில் வெளிப்படவில்லை. 1992ஆம் ஆண்டிலேயே இது வெளிப்படத் தொடங்கியது இராணுவத் தலைமை தமக்குள் வெளிப்படையாகவே மோதத் தொடங்கின.

இந் நிலைக்குக் காரணம் போர் இவ்வளவு கடுமையானதாக இருக்குமென்றோ, வெற்றிபெற முடியாத யுத்தமாக இழப்புக்களுடன் நீண்டு கொண்டே செல்லும் என்றோ சிறிலங்கா இராணுவமோ பௌத்த பேரினவாதிகளோ ஆரம்பத்தில் கருதாததுதான். இரண்டாம்கட்ட ஈழப்போர் ஆரம்பித்தபோது சுமார் ஒருவருடகாலத்திற்குள் போரை முடித்து வைத்து, வெற்றிவாகை சூடிவிடலாம் என்றநோக்கிலேயேஇராணுவம்போரைநடத்தியது.

ஆனால், போர் எதிர்பார்த்த வெற்றிக்கு பதிலாக பாரிய உயிர், பொருள் இழப்புக்களையே ஏற்படுத்தியது. எதிர்பாராத இழப்புக்களை எதிர்பாராத வேளையில், சிறிலங்காவின் முப்படைகளும் சந்திக்க வேண்டி வந்தது. இந் நிலையிலேயே போரை நடத்திச் செல்லும் முறைபற்றிக் கேள்விகளும் சர்ச்சைகளும் கிளம்பின. இராணுவத் தளபதிகளும், பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் முரண்பட்டுக் கொண்டார்கள் பதவி மாற்றங்கள் அடிக்கடி நிகழ

# வடக்கு கிழக்கு பிரச்சினை எம்மையும் பாதிக்கின்றது

## அமைச்சர் தொண்டா பேட்டி

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு இணைப்பு எதிர்ப்பைக் கைவிடுமாறு கோருவது கேட்கும் விஷயம் அல்ல.அவர்களுடன் (யு. என். பி.) கூட்டாகச் செயற்பட வேண்டும். அப்படி நான் செய்து வருகின்றேன். எமது மக்களுக்குப் பிரஜா உரிமை தர மறுத்தார்கள். அவர்களுடன் சேர்ந்து செயற்பட்டு இப்போது பிரஜா உரிமையை பெற்றுள்ளோம். மனிதன் நியாயமற்ற முறையில் நடக்கும்போது நாம் நியாயமான முறையில் நடந்து அவர்களது மனதை மாற்றவேண்டும். இவ்வாறு அமைச்சர்எஸ்.தொண்டமான் ஐலண்ட் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு இணைப்பு குறித்த யு. என். பி யின் எதிர்ப்பைக் கைவிடுமாறு நீங்கள் கேட்பீர்களா? யு. என். பி. தேர்தலின் பிறகு தனது கொள்கையை மாற்றும் என்று நினைக்கிறீர்களா? என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நல்லதைச் செய்தால் நல்லது விளையும். இது ஒரு தேசியத் தேர்தல் அல்ல. தேசியப் பிரச்சினைகள் இப்போது தலைதூக்காது என்று அவர் மேலும் கூறினார்.

யு. என். பி. அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் (மாகாண சபை) வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்துள்ளது. உங்களது நிலைப்பாடு வடக்கு-கிழக்கு இணைப்பாகும். அப்படியிருக்க அவர்களுடன் தொடர்ந்து எவ்வாறு உங்களுக்கு உடன்பாடு இருக்கமுடியும். என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில்-

எமது முக்கிய கரிசனை இந்திய வம்சாவளியினரையும் அவர்களது எதிர்காலத்தையும் பற்றியது. அவர்களின் சுதந்திரப் பிரச்சினையும் உள்ளது. வடக்கு-கிழக்கு பிரச்சினை உள்ளவரையில் எமது மக்களும் சந்தேகிக்கப்படுகிறார்கள். அவர்களும் கைது செய்யப்படுகிறார்கள். ஆகவே இந்தப்பிரச்சினை எம்மையும் பாதிக்கிறது என்றார்.

வேறு எவருமல்ல, சிறிலங்கா அரசின் தலைவரே இந்திய அரசின் தலைவருடன் சேர்ந்து இணைப்பை ஆதரித்து இருக்கிறார். இணைப்புத்தான் இன்றைய எதார்த்தம் என்று மற்றொரு கேள்விக்குப் பதிலளித்த அவர் கூறினார்.

# பத்திரிகைத்தாள் தீர்வை திட்டமிட்ட நடவடிக்கை

## ஐலண்ட் ஆசிரியர் கண்டனம்

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் பத்திரிகைத் தாள்களுக்கான சுங்கத் தீர்வையை பத்து சதவீதத்தால் அதிகரிக்க அரசு எடுத்தமுடிவு இலங்கையில்பத்திரிகைத் துறைக்குவீழ்ந்துள்ள மாபெரும் அடி என ஐலண்ட் பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

பத்திரிகை உருவாக்கம் குறித்து அநேகமான மக்கள் அறிந்திருக்கவில்லை. இதனால் இந்த புதிய தீர்வை அதிகரிப்பினால் பத்திரிகைகள் எதிர்நோக்கவுள்ள நெருக்கடியை அவர்கள் அறிந்திருக்க நியாயமில்லை என்றும் அதில் குறிப்பிட்டுள்ளது.

வானொலியும் தொலைக்காட்சியும் அரச கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட பின்னர் அவை ஒரு பக்கச் செய்திகளையே வெளியிடுகின்றனஎனக் குறிப்பிடும் ஐலண்ட் இதனால் மக்களின் ஒரேயொரு தகவல் அறியும் சாதனமாக பத்திரிகைகளே உள்ளன. அதுவும் அரசின் இந்த புதிய முடிவுகளினால் நெருக்கடிக்குஉள்ளாக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளது.

இதனால் பத்திரிகைத்தாள்கள் மீதான அரசின் தீர்வை அறவீடு, மக்களின் தகவல் அறியும் சுதந்திரத்திற்கு அரசு அறவிடும் தீர்வையாகவே கருதவேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளதுஎன்று ஐலண்ட் ஆசிரியர் தலையங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

# ஜே. வி. பி. வழக்குகள் வாபஸ் பெறப்பட்டன

(கொழும்பு)

ஜே. வி. பியினருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டசிறு வழக்குகள் சட்டமா அதிபரின் பணிப்புரையின் பேரில்வாபஸ் பெறப்பட்டன.

சுவரொட்டிகளை ஒட்டுதல், கூட்டம்நடத்தல், கூட்டத்தில் பங்கு பற்றுதல், வீதிகளைத் தடைசெய்தல். அணிநடையில் பங்குகொள்ளல்,தேசிய அடையாள அட்டைகளைக் கைப்பற்றுதல்எச்சரிக்கைக்கடிதங்களைக்கொடுத்தல் ஆகிய குற்றங்களுக்காக அவசரகால சட்டத்தின்கீழ் கைது செய்யப் பட்ட குற்றச் சாட்டுகள் சம்பந்தமாக வழக்குத் தாக்கல் செய்யுமாறு சட்ட மா அதிபர் பொலிசைப் பணித்திருந்தார். மேலும் சில வழக்குகளில் சிறு குற்றங்களுக்காக குற்றங்களை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கோரியவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையை அனுமதிக்குமாறு அரசவழக்கறிஞர்களுக்குசட்டமாஅதிபர் ஆலோசனை கூறியிருந்தார்.

மே 15ஆம் திகதிக்குமுன்னர் ஜே.வி.பி சந்தேக நபர்கள் தொடர்பான கோவைகளைப்

### கருத்தரங்குகள்

விறகினை சிக்கனமாகப் பயன்படுத்தும் நோக்கோடு உயர் தொழில் நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்ட இரட்டைச் சூட்டடுப்பினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் சக்திப் பகுதியினர் அறிமுகப்படுத்தி வருகின்றனர்.

இதனது பாவனை முறை பற்றியும்,பயன்பாடு பற்றியும் பாடசாலைகள், சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள், தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுக் சங்கங்கள், கிராமிய உற்பத்தி குழு கருத்தரங்குகள், பொது நிறுவனங்களின் மகளிர் அமைப்புப் பணிமனைகளிலும்விளக்கவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### பதிவு செய்ய கோரிக்கை

கொழும்பு புனர் வாழ்வு தலைமைச் செயலகத்தினால் இடம் பெயர்ந்த மக்களின் பூரண விபரங்களைப் பெறுவதற்குரிய பத்திரம் யாழ். செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கிராமசேவை அலு

### சரித்திரம் படைத்தாய் அன்னை பூபதியே

நாளை விடியும் எம்நாடு
என்றுதான் நினைத்திருந்தோம்
காலம் நாளும் கழிந்தாலும்
நாளும் வளரும் உன்நினைவு
நன்று நன்று உன்நினைவு
நாட்டில் நீயோர் வெண்ணிலவு
உன்னைப் போல வாழ்வதற்கு
உள்ளம் நாளும் அலைகிறதே
எங்கள் தெய்வம் பூபதியே - உன்
எல்லை அற்ற எண்ணங்கள்
எம்மை நாளும் வாட்டுதம்மா
வியக்க வைக்கும் உன்தியாகம் - இன்று
விடிவை நோக்கி செல்கிறதே
மண்ணில் நீவிர் இல்லையென்றால்
நீங்கள் மறைந்தவர்கள் அல்ல
தினமும் மலர்ந்து கொண்டிருக்கும் - எம்
தேசத்தின் தியாகச் செம்மல்கள்
உங்கள் பயணம் தொடருமிங்கே
தமிழீழம் விரைவில் உதிக்குமம்மா......

— வே. அன்பழகன்

# ஐ. தே. க. பட்டியலில் சுசிலுக்கு முதன்மை

(கொழும்பு)

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஐ. தே. கட்சியின் சார்பில் 6 தமிழர்கள் போட்டியிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் மோதிலால் நேரு, திருமதி வேலம்மாள் செல்லச்சாமி, இராஜகோபால் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் இவர்கள் தமது வேட்புமனுக்களை நேற்று முன் தினம் கொழும்புக் கச்சேரியில் தாக்கல் செய்தனர்,

ஐ. தே. கட்சியின் சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களினுள் முன்னாள் மேல் மாகாண சபை முதலமைச்சர் சுசில் முனசிங்காவின் பெயரே முதன்மை வேட்பாளராகக் குறிப்பிடப்பட்டுள்ளது

காணாமல் போயுள்ள

# 14 விவசாயிகள் குறித்து விசாரிக்க குழு

[கொழும்பு]

மட்டக்களப்பில் இராணுவத்தினரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு காணாமற்போன 14 தமிழ் விவசாயிகள் குறித்து விசாரணை நடத்த இராணுவத் தளபதியினால் விசேட அதிகாரிகள் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. சர்வதேச செஞ்சிலுவை சங்கம் இது குறித்து விசாரணை நடத்துமாறு அரசைக் கோரியதையடுத்தே இந்த விசாரணைக் குழு அமைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த 14 விவசாயிகளும் தம் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது படையினரால் கைது செய்யப்பட்டு முகாம் கொண்டு செல்லப்பட்டதாக கூறப்படுகின்றது.

தமிழீழ பொதுக்கல்வித் தேர்வு

# பரீட்சைபற்றி கருத்துகளை தெரியப்படுத்த கோரிக்கை

தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவையினால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட க. பொ. த.முன்னோடித்தேர்வு பற்றிய தத்தமது கருத்துகளை ஆர்வலர்கள் எழுத்து மூலம் க. அருள் ஆசிரியர், 19,நாயன் மார்கட்டு வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பாக ஒவ்வொரு கோட்டங்களுக்கும் பேரவையின் ஆய்வுக் குழு நேரில் சென்று கருத்துகளை பெற்றுக்கொள்ளவுள்ளது.இதன்படி யாழ்ப்பாணம், வேலணை கோட்டங்களுக்கு எதிர்வரும் 17ஆம் திகதி தமிழீழ கல்விக்கழக அலுவலகத்திலும், மருதனார்மடம், பண

தொடங்கின.

இந் நிலைக்குக் காரணம் போர் இவ்வளவு கடுமையானதாக இருக்குமென்றோ, வெற்றிபெற முடியாத யுத்தமாக இழப்புக்களுடன் நீண்டு கொண்டே செல்லும் என்றோ சிறிலங்கா இராணுவமோ பௌத்த பேரினவாதிகளோ ஆரம்பத்தில் கருதாததுதான். இரண்டாம்கட்ட ஈழப்போர் ஆரம்பித்தபோது சுமார் ஒருவருடகாலத்திற்குள் போரை முடித்து வைத்து, வெற்றிவாகை சூடிவிடலாம் என்றநோக்கிலேயேஇராணுவம்போரைநடத்தியது.

ஆனால், போர் எதிர்பார்த்த வெற்றிக்கு பதிலாக பாரிய உயிர், பொருள் இழப்புக்களையே ஏற்படுத்தியது. எதிர்பாராத இழப்புக்களை எதிர்பாராத வேளையில், சிறிலங்காவின் முப்படைகளும் சந்திக்க வேண்டி வந்தது. இந் நிலையிலேயே போரை நடத்திச் செல்லும் முறைபற்றிக் கேள்விகளும் சர்ச்சைகளும் கிளம்பின. இராணுவத் தளபதிகளும், பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் முரண்பட்டுக் கொண்டார்கள் பதவி மாற்றங்கள் அடிக்கடி நிகழ வேண்டியதாயிற்று.

ஆனால், தோல்விகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் ஓர் இராணுவத்திற்குள்ளும், அரசிற்குள்ளும் இவ்வாறான சச்சரவுகள் ஏற்படுவது புதியதொன்றல்ல. தோல்விக்கான பொறுப்பை இராணுவத் தரப்போ அன்றிப் பாதுகாப்பு அமைச்சோ அன்றி அரசியல்வாதிகளோ ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லாத வேளையிலேயே இவ்வாறான முரண்பாடுகளும் மோதல்களும் இடம்பெறுகின்றன.

இதற்கு, உதாரணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வெளியில் எங்கும் செல்லத் தேவையில்லை. இந்திய இராணுவம் புலிகளிடம் சந்தித்த தோல்வியின் போதே இதனைக் காணலாம். களத்தில் இருந்த இந்திய இராணுவ அதிகாரிகளும் தலைமைப்பீடத்தில் இருந்த இராணுவ சிரேஷ்ட அதிகாரிகளும் இது குறித்து முரண்பட்டுக் கொண்டார்கள். நிலையை விளங்கிக்கொள்ளாமையும் தப்பான கணிப்பீடுகளுமே போரின் தோல்விக்குக் காரணமென களத்திலிருந்த அதிகாரிகள் சுட்டிக் காட்டியவேளை அதிகாரிகளின் திறமையின்மையே தோல்விக்குக் காரணமென இந்தியாவிலிருந்த மேல் நிலை அதிகாரிகள் களத்திலிருந்த அதிகாரிகள் மீது பழியைச் சுமத்தினர்.

இதேவேளை இராணுவ பீடம் அரசியல்வாதிகளும், புலனாய்வுத்துறையும் பரஸ்பரம் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியதோடு தோல்விகளுக்கான பழியை மற்றவர் மீது சுமத்திவிடுவதிலேயே அக்கறை காட்டின. அரசியல் வாதிகளின் தவறான முடிவுகளும், புலனாய்வுத் துறையின் தப்பான தகவல்களுமே தோல்விக்குக் காரணம் என இராணுவம் குற்றம் சாட்டியது. இராணுவத்தின் திறமையின்மையே காரணமென புலனாய்வுத்துறை கூறியது. அதாவது, தோல்விக்கான தமது பங்கை எவரும் ஏற்றுக்கொள்ளத்தயாராக இருக்கவில்லை.

இதேபோன்றதொரு நிலையே இன்று சிறிலங்காவிலும் ஏற்பட்டுள்ளது. தோல்வியை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாதவர்கள் பழியை மற்றவர் மீது சுமத்திவிட முற்பட்டுள்ளார்கள். ஆனால் இது தவிர்க்கமுடியாதது. ஏனெனில் வெற்றி கொள்ள முடியாத ஒரு போரில் ஈடுபட்டுள்ள இராணுவம், யுத்தத்திற்கான பொது திட்டத்தின் அடிப்படையில் எப்பொழுதுமே போரை நடத்திச் செல்ல முடியாது என்பதே நிதர்சனம்

---

...மில்லை என்றும் அதில் குறிப்பிட்டுள்ளது.

வானொலியும் தொலைக்...

...படுத்தியுள்ளதுஎன்று ஐலண்ட் ஆசிரியர் தலையங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

## ஜே. வி. பி. வழக்குகள் வாபஸ் பெறப்பட்டன

(கொழும்பு)

ஜே. வி. பியினருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டசிறு வழக்குகள் சட்டமா அதிபரின் பணிப்புரையின் பேரில்வாபஸ் பெறப்பட்டன.

சுவரொட்டிகளை ஒட்டுதல், கூட்டம்நடத்தல், கூட்டத்தில் பங்கு பற்றுதல், வீதிகளைத் தடைசெய்தல். அணிநடையில் பங்குகொள்ளல்,தேசிய அடையாள அட்டைகளைக் கைப்பற்றுதல்எச்சரிக்கைக்கடிதங்களைக்கொடுத்தல் ஆகிய குற்றங்களுக்காக அவசரகால சட்டத்தின்கீழ் கைது செய்யப் பட்டவர்களே விடுவிக்கப்பட்டுள்ளனர்.

1988-89 காலப் பகுதியில் இடம்பெற்ற ஜே.வி பி கிளர்ச்சியின் பின் 3, 070 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. போதியசாட்சியங்கள் இல்லை என்றகாரணத்தால் 2,011வழக்குகள் தள்ளப்பட்டன. 198

குற்றச் சாட்டுகள் சம்பந்தமாக வழக்குத் தாக்கல் செய்யுமாறு சட்ட மா அதிபர் பொலிசைப் பணித்திருந்தார். மேலும் சில வழக்குகளில் சிறு குற்றங்களுக்காக குற்றங்களை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கோரியவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையை அனுமதிக்குமாறு அரசவழக்கறிஞர்களுக்குசட்டமாஅதிபர் ஆலோசனை கூறியிருந்தார்.

மே 15ஆம் திகதிக்குமுன்னர் ஜே.வி.பி சந்தேக நபர்கள் தொடர்பான கோவைகளைப் படித்து, ஒன்றில் வழக்குத் தாக்கல் செய்யும்படி அல்லது அவர்களை விடுதலை செய்யுமாறு சட்ட மாஅதிபர் அலுவலகத்தில் அவசரகாலசட்டப் பிரிவு சிரேஷ்ட அரச வழக்கறிஞர்மோகன்நொட்றிக்கோவை சட்ட மாஅதிபர் கேட்டுள்ளார்.

---

...னோர்.

இதனது பாவனை முறை பற்றியும்,பயன்பாடு பற்றியும் பாடசாலைகள், சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள், தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராமிய உற்பத்தி குழு கருத்தரங்குகள், பொது நிறுவனங்களின் மகளிர் அமைப்புப் பணிமனைகளிலும்விளக்கவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### பதிவு செய்ய கோரிக்கை

கொழும்பு புனர் வாழ்வு தலைமைச் செயலகத்தினால் இடம்பெயர்ந்த மக்களின் பூரண விபரங்களைப் பெறுவதற்குரிய பத்திரம் யாழ். செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கிராமசேவை அலுவலகர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சகலஇடம்பெயர்ந்துவாழும் மக்களும் உடன் தத்தமது பகுதிக் கிராமசேவை அலுவலர்களை நேரில் சந்தித்து அப்பத்திரத்தில் உள்ள விபரங்களைக் கொடுத்து ஆவன செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது (24)

---

...வத்தினரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு காணாமற்போன 14 தமிழ் விவசாயிகள் குறித்து விசாரணை நடத்த இராணுவத் தளபதியினால் விசேட அதிகாரிகள் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. சர்வதேச செஞ்சிலுவை சங்கம் இது...

...யடுத்தே இந்த விசாரணைக் குழு அமைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த 14 விவசாயிகளும் தம் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது படையினரால் கைது செய்யப்பட்டு முகாம் கொண்டு செல்லப்பட்டதாக கூறப்படுகின்றது.

---

தமிழீழ பொதுக்கல்வித் தேர்வு

## பரீட்சைபற்றி கருத்துகளை தெரியப்படுத்த கோரிக்கை

தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவையினால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட க. பொ. தே.முன்னோடித்தேர்வு பற்றிய தத்தமது கருத்துகளை ஆர்வலர்கள் எழுத்து மூலம் க. அருள் ஆசிரியர், 19,நாயன் மார்கட்டு வீதி,நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பரீட்சைக்காலம், பாடத்திட்டம், வினாக்கள், விடைத்தாள் மதிப்பீடு என்பவை குறித்து கருத்துகளை இம்மாதம் 23ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கலாம்.

இதேசமயம் இது தொடர்பாக ஒவ்வொரு கோட்டங்களுக்கும் பேரவையின் ஆய்வுக் குழு நேரில்சென்று கருத்துகளை பெற்றுக்கொள்ளவுள்ளது.இதன்படி யாழ்ப்பாணம், வேலணை கோட்டங்களுக்கு எதிர்வரும் 17ஆம் திகதி தமிழீழ கல்விக்கழக அலுவலகத்திலும், மருதனார்மடம், பண்டத்தரிப்பு கோட்டங்களுக்கு 18ஆம் திகதி இராமநாதன் கல்லூரியிலும், வடமராட்சி கோட்டத்திற்கு 20ஆம் திகதி வேலாயுதம் ம. வித்தியாலத்திலும், தென்மராட்சி கோட்டத்திற்கு டிறிபேக் கல்லூரியில் 22ஆம் திகதியும் கருத்துகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

---

# ஐ. நா. உதவி வாகனங்களில் பொஸ்னியாவிற்கு ஆயுதம்

## மா மூடைகளின் கீழ் மறைக்கப்பட்டிருந்தன

[சரஜேவோ]

சரஜேவோ விமான நிலையத்திலிருந்து அருகிலுள்ள பொஸ்னிய முஸ்லிம் படைகளின் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு கிராமத்துக்கு சென்று கொண்டிருந்த ஐ.நா.உதவி வாகனங்களில் பெருமளவு வெடிமருந்துகளும், துப்பாக்கி ரவைகளும் கொண்டு செல்லப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

இந்த ஐ. நா. ட்ரக் வண்டிகளை சோதனை நிலையத்தில் வழிமறித்து சேர்பிய,படைகள் சோதனை நடத்தியபோது அகதிகளுக்கென கொண்டு செல்லப்பட்ட மாமூடைகளின் கீழ்சுமார் 5000 சுற்று ரைபிள் கனரக இயந்திரத் துப்பாக்கி ரவைகளும் வெடிமருந்துகளும் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இச்சம்பவத்தையடுத்து ஐ நா அதிகாரிகளுக்கும் சேர்பிய தரப்பிற்கும் இடையே முறுகல் நிலை தோன்றியுள்ளது.ஐ நா பொஸ்னிய தரப்பினருக்கு ஆதரவாக செயற்படுவதாக சேர்பியர்கள் இதுவரை அடிக்கடி குற்றஞ்சாட்டி வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஐ நா. வாகனங்களில் வெடி மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து சரஜேவோ விமான நிலையத்தில் ஐ. நா. அதிகாரிகள் உடனடியாகதேடுதல் நடத்தியபோது அங்கும் சில ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இச்சம்பவங்களையடுத்து இனி ஐ. நா. வாகனங்களை விரும்பிய நேரத்தில் எங்கு வேண்டுமானாலும் தாம் சோதனையிடப் போவதாகச் சேர்பியர்கள் அறிவித்துள்ளனர்.

ஐ. நா. வாகனத்தில் ஆயுதங்கள் மறைவாகக் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் குறித்து ஐ. நா. அதிகாரிகள் அதிர்ச்சியையும், கவலையையும் தெரிவித்தனர். இது குறித்து உடனடி விசாரணைக்கு யூ. என். எச். சி. ஆர். உத்தரவிட்டுள்ளது பெல்கிரேட்டில் இது குறித்துப் பேசிய ஐ. நா.பேச்சாளர் இந்த ஆயுத விவகாரத்தில் ஐ. நா. அதிகாரிகள் சம்பந்தப்பட்டுள்ளனரா என இப்போது கூற முடியாது என்றும் ஐ. நா. வாகனங்கள் புறப்பட முன் தீவிர சோதனையின் பின்பே புறப்பட அனுமதிக்கப்படுவது வழக்கம். இந் நிலையில் எவ்வாறு ஆயுதங்கள் ஐ. நா. வாகனத்தில் ஏற்றப்பட்டன என்பது புரியவில்லை என்றும் குறிப்பிட்டார்.

---

### ராவ், பிரேமா விசேட பாதுகாப்பு

[டாக்கா]

இன்று பங்களாதேஷில் ஆரம்பமாகவுள்ள சார்க் மாநாட்டில் கலந்துகொள்ளச்செல்லும் இந்தியப் பிரதமருக்கும் சிறிலங்கா ஜனாதிபதிக்கும் விசேட பாதுகாப்பு அளிக்கப்படவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை பங்களாதேஷ் அரசு மேற்கொண்டுள்ளது இதனிடையே சார்க் மாநாட்டில் கலந்து கொள்ளவென ஜனாதிபதி பிரேமதாசா கடந்த வியாழன் மாலை பங்களாதேஷ் புறப்பட்டுச் சென்றார்.

---

## தரைமார்க்கமாக யாழ். வர ஆயருக்கு அனுமதி மறுப்பு

(கொழும்பு)

தரைமார்க்கமாக யாழ் செல்ல அனுமதி கோரியிருந்த அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பர்னான் டோவிற்கு கிளிநொச்சிவரை பயணம் செய்யவே கூட்டுப்படை தலைமை அலுவலகத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது: இனப்பிரச்சினை தீர்வுகுறித்துப் பேச சில புத்திஜீவிகளையும் அழைத்துக் கொண்டு யாழ். செல்வதற்கு அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பர்னான்டோ கூட்டுப்படை தலைமை அலுவலகத்திடம் அனுமதி கோரியிருந்தார். இதற்கு தரைமார்க்கமாக கிளிநொச்சி வரையும் செல்லவே அனுமதி அளிக்கமுடியும் எனவும் அல்லது செஞ்சிலுவைச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் விமானமூலம் யாழ்ப்பாணம் செல்லமுடியும் எனவும் பதிலளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வெளிநாட்டு தூதுவராலயங்களுக்கு யாழ். நிலைபற்றி மிகுந்த தெளிவான விளக்கத்தை ஆயர் அளித்துள்ளதாகவும், குறிப்பிடப்பட்ட அளவு கப்பலில் செல்லும் பொருள்களினால் குடாநாட்டு மக்களின் தேவைகளை பூர்த்திசெய்யமுடியாது என்ற எண்ணக் கருவை அவர் வலியுறுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது திருச்சபை மூலம் யாழ். குடாநாட்டு மக்களுக்கு கூடிய உதவிகளைச் செய்வதற்கு ஆயர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் குடாநாட்டிற்கு சீரான ஒரு பாதை இன்மையால் இந்த விடயம் பெரும் தடங்கலுக்கு உள்ளாகி இருப்பதாக வெளிநாட்டு, உள்நாட்டு பிரதிநிதிகளுக்கு விளக்கியிருப்பதாகவும் தெரியவருகின்றது. (நி)

---

### வீரப்பனின்

தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் தமிழ்நாட்டில் கண்ணிவெடிக் கலாசாரம் வருவதையிட்டு கவலையுறுவதாகத் தெரிவித்தார்.

---

### புத்தாண்டு

புத்தாண்டின் போது படையினர் தாக்குதல் ஏதும் நடத்தமாட்டார்கள் என்றும் கடந்த காலங்களில் நடந்துகொண்டதைப் போன்றே படையினர் நடந்துகொள்வர் என்றும் குறிப்பிட்டார்.

ஈழநாதம்

# 5 காங்கிரஸ் உறுப்பினர் அ.தி.மு.கவினரால் கடத்தல்

## வாழப்பாடி குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினர்கள் ஐந்து பேர் கடத்தப்பட்டு முதல்வர் ஜெயலலிதாவின் இல்லத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதாக தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் செய்தியாளரிடம் அவர் மேலும் கூறுகையில், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியைப் பிளவு படுத்தும் வகையில் அவர்களுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டதாகவும் இவ் விடயத்தில் மாநில அமைச்சர்கள் இருவர் நேரடியாக சம்பந்தப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன், அ. இ. அ. தி. மு. க. ஆபத்தான பாதையில் செல்வதாகவும், இந்த நிகழ்ச்சி பற்றி இந்திய தலைமைக்கு தெரியப்படுத்தப்பட்டிருப்பதாகவும் வாழப்பாடி கூறியுள்ளார்.

## அன்னை பூபதி நினைவு தீவக மக்கள் அனுஷ்டிப்பு

தியாகச்சுடர் அன்னைபூபதி அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவாக கருத்தரங்குகளும், அன்னை பூபதி அவர்கள் பற்றிய படக்காட்சியும் தீவகக் கோட்ட மட்டத்தில் நாளை மாலை 6-00 மணிக்கு யாழ். புகையிரத நிலையத்தில் நடைபெறும்.

தொடர்ந்து 12ஆம் திகதி யாழ். முஸ்லிம் வட்டாரத்திலும், 13ஆம் திகதி அரியாலை சாம்சன் குடியிருப்பிலும், 14 ஆம் திகதி அரியாலை மணியரசன் குடியிருப்பிலும், 15 ஆம் திகதி அரியாலை டயஸ் முகாமிலும், 16ஆம் திகதி நாவற்குழி லவனிதா குடியிருப்பிலும், 17ஆம் திகதி கெற்பலி பண்டிதர் குடியிருப்பிலும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (90)

## மாவீரர் நினைவுக் கூட்டம்

10-4-1988 இல் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய 2ஆம் லெப். மணாளன், அவருடன் வீரச்சாவெய்திய ஏனைய மாவீரர்கள் ஆகியோரின் 5-ம் ஆண்டு நினைவு நாளையொட்டி ஈகைச்சாவெய்திய அன்னை பூபதி அம்மா அவர்களின் 5-ம் ஆண்டு நினைவஞ்சலியும் பங்குனி, சித்திரை மாதங்களில் தம்மை இம் மண்ணுக்காய் விதைத்த திருமலை மாவட்ட மாவீரர்களின் நினைவாகவும் நினைவஞ்சலிக் கூட்டம் திருக்கோணமலை இடம்பெயர்ந்த மக்களால் இன்று தும்பளை மணாளன், தயான், பூபதி வீடமைப்புத் திட்டத்தில் பி. ப. 4.30 மணி அளவில்நடாத்தப்படவுள்ளது.

## கருத்தரங்கு


(நெல்லியடி)

வடமராட்சிகோட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கருத்தரங்கு, இம் மாதம் 12-ம் திகதி காலை 9-30 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

5-ம் ஆண்டு புலமைப்பரிசில் சம்பந்தமான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட இருப்பதனால் தவறாது அதிபர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்ளுகின்றார். [30]

## வீரச்சாவு

லை), 2ஆம் லெப்டினன்ட் நவக்குமார் (தியாகராஜா நேமிநாதன், பெரியநீலாவணை மட்டக்களப்பு) வீரவேங்கை தேவதாஸ்/தேவகுமார் வெற்றிவேல் சிறிதரன் காரைதீவு3, அம்பாறை) ஆகியோர் வீரச்சாவு அடைந்தனர்.



வீரவேங்கை கலாதேவன் லோஜித்

26-03-93 அன்று மட்டக்களப்பு தம்பிலுவிலில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரவேங்கை கலாதேவன் லோஜித் (இளையதம்பி அற்புதராஜா தம்பிலுவில் மட்டக்களப்பு) சயனைட் அருந்தி வீரச்சாவு அடைந்தார்.



வீரவேங்கை விஸ்வம்

19-03-93 அன்று அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரின் தாக்குதலில் வீரவேங்கை விஸ்வம் (நாகமணி சந்திரசேகரம் முனைக்காடு கொக்கட்டிச் சோலை) வீரச்சாவடைந்தார்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## பங்கீட்டுப் பொருள்களுடன் பனம்வெல்லம் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தெங்கு பனம்பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களினாலும், கொத்தணிகளாலும் உற்பத்தியாக்கப்படும் வெல்லத்தினை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் உணவு முத்திரைக்கும், மதிய உணவு முத்திரைக்கும் வழங்கப்படும் பொருள்களின் ஒரு பகுதியாக வழங்குவதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணம், தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் ஆகிய கொத்தணி மட்டத்திலான நான்கு கோட்டங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், ஒவ்வொரு கோட்டத்திற்குமான இணைப்பாளர்களாகக் கொத்தணிகளின் முகாமையாளர்கள் நியமிக்கப்படுவதாகவும் குறித்த ஏற்பாடுகளின்படி மேற்படி இணைப்பாளர்களை வெல்ல பங்கீட்டைசீராக நடைமுறைப் படுத்துமாறும் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (ப/பொ) அவர்களின் சுற்றுநிருபம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (22)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 09-04-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம் 9009

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

40-0630, 28-9186, 42-2157, 28-3029, 28-2829,
41-1092, 27-6579 26-3654, 42-3945, 24-4103,
26-7663, 40-4429, 24-5496, 24-9645, 24-0422,
26-5870, 28-1928, 41-5605, 24-0521, 26-8565,
26-2668, 26-2297, 41-9579, 26-5113, 27-9771,
27-4024, 41-9663, 27-5912, 28-6546, 40-6759.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-5127, 24-5119, 28-0248, 26-7286, 26-7252,
27 5217, 27-6692, 22-0777, 27-5197, 28-3004,
26-8051, 26-3146, 26-7272, 26 2941, 26-2277.

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான ஆங்கீரச வருடம் பங்குனித் திங்கள் 28ஆம் நாள் (10-04-93) சனிக்கிழமை பகல் 10.36 மணிமுதல் 12-06 மணி வரைஉள்ள அனுஷ நட்சுஷத்திரமும், சதுர்த்தித் திதியும், சித்தயோகமும் கூடிய சுப முகூர்த்த வேளையில்,

எமது கனிஷ்ட புத்திரன்
திருவளர் செல்வன்
சிவலோகநாதன்
அவர்களுக்கும்

எமது புதல்வி
திருநிறை செல்வி
சந்திரகலா
அவர்களுக்கும்

திருமணம் நடைபெறும் என்பதை உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

திருமணம் நிகழும் மண்டபம்: கலையரசர் மண்டபம்
15, Rue Sainte Marguerite. 93500 - Pantin, France.
(Mo: Aubervilliers 4 Chemins)

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி கனகசபை
புங்குடுதீவு - 10.

திருமதி ஞானவடிவேல்
புங்குடுதீவு – 11.

தகவல்: திரு. திருமதி மோகனசுந்தரம் மகாலெட்சுமி

(சி-6392)

உ

வண்ணார்பண்ணை அன்னசத்திர ஒழுங்கை

வேம்படி ஸ்ரீ சித்திவிநாயகர்

ரேஸ்ரி

பழப்பான விற்பனையாளர்களுக்கு

உங்களுக்கு தேவையான பழப்பானங்களை

பின்வரும் எமது முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

வடமராட்சியில்

சாயிகிருஷ்ணா, வதிரி சந்தி, கரவெட்டி

தென்மராட்சி

அறிவகம், சாவகச்சேரி.

[சி-6384]

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

எமது புதிய வெளியீடுகள்

(1) ரஜனிகாந் – மீனா

எஜமான் (ஒறிஜினல்)

(2) தியாகராஜன் – ஷாலி

அசோகசக்கரம் (ஒறிஜினல்)

புதிய, பழைய படங்கள் யாவையும் குறைந்த கட்டணத்தில் பதிவுசெய்து கொள்ளவும் புதிய, பழைய கசெட்டில் படத்தை குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்

யாழ் இந்து மகளிர் கல்லூரி பொன்விழாச் சபை

அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பிற்கான

திகதியை நீடித்தல்

பொன்விழா நிதிக்காக பொன் விழாச்சபையினால் மேற்கொள்ளப்பட்ட நண்பர்களுக்கு மட்டுமான அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பினை 02-05-1993 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. தவிர்க்கமுடியாத காரணத்தினால் இச் சீட்டிழுப்பு 22-05-1993ஆம் திகதிக்கு பின்போடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம். சீட்டு விற்பனைக்கான இறுதித் திகதி 18-05-1993 ஆகும்.

திருமதி தி. நாகராஜா
தலைவர்

நா. செல்வரத்தினம்
செயலாளர்

(சி-6387)

## உற்பத்தி

நிகழ்ச்சிகளாக இடம்பெறுகின்றன.

இது தொடர்பாக, தமிழீழ

வடமராட்சியில்
சாயிகிருஷ்ணா, வதிரி சந்தி, கரவெட்டி
தென்மராட்சி
அறிவகம், சாவகச்சேரி.
[சி-6384]

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

---

எமது புதிய வெளியீடுகள்

(1) ரஜனிகாந் – மீனா
**எஜமான்** (ஒறிஜினல்)

(2) தியாகராஜன் – ஷாலி
**அசோகசக்கரம்** (ஒறிஜினல்)

புதிய, பழைய படங்கள் யாவையும் குறைந்த கட்டணத்தில் பதிவுசெய்து கொள்ளவும் புதிய, பழைய கசெட்டில் படத்தை குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளவும் எம்மை நாடுங்கள். ஒரு படத்தின் பதிவுக்கட்டணம் ரூபாய் 125/- மட்டுமே. புதிய படங்களை உடனுக்குடன் பதிவுசெய்து பெற்றுக் கொள்ளுங்கள்.

**குணம் வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
(சி-6383)

---

## இன்று நேற்றல்ல!

கடந்த 15 வருடங்களாக கலை வர்த்தகத் துறையில் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்!

**AL95 கலை, வர்த்தக வகுப்புக்கள்**

இன்று ஆரம்பம் : காலை 10 மணி

**விக்னா கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(சி-6389)

---

## ஸ்ரீதர் திரையரங்கில்

**100 RIFLES**
**(100 துப்பாக்கிகள்)**
தமிழ் விளக்கம்
தினசரி மாலை 4 மணி, 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மாலை 4 மணி, 6 மணி
(சி-6376)

---

## திகதியை நீடித்தல்

பொன்விழா நிதிக்காக பொன் விழாச்சபையினால் மேற்கொள்ளப்பட்ட நண்பர்களுக்கு மட்டுமான அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பினை 02-05-1993 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. தவிர்க்கமுடியாத காரணத்தினால் இச் சீட்டிழுப்பு 22-05-1993ஆம் திகதிக்கு பின்போடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம். சீட்டு விற்பனைக்கான இறுதித் திகதி 18-05-1993 ஆகும்.

திருமதி தி. நாகரார்ஜா
தலைவர்


நா. செல்வரத்தினம்
செயலாளர்

(சி-6387)

---

ஒக்ரல் 10 முதல்
**யுனிவேர்சல்**
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்
**A|L-95**
இரசாயனவியல்
திரு. மகாதேவா
பௌதீகவியல்
திரு. வர்ணம்
தாவரவியல்
திரு. ஐங்கரநேசன்
விலங்கியல்
திரு. கெங்காதரன்
தூய/பிரயோக கணிதம்
திரு. கிருஸ்ணா
(சி-6338)

---



வீரவேங்கை விஸ்வம்

19-03-93 அன்று அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரின் தாக்குதலில் வீரவேங்கை விஸ்வம் (நாகமணி சந்திரசேகரம் முனைக்காடு கொக்கட்டிச் சோலை) வீரச்சாவடைந்தார்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

---

உற்பத்தி

நிகழ்ச்சிகளாக இடம்பெறுகின்றன.

இது தொடர்பாக, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் ''தமிழீழ மண்ணின் உயிர் நாடிகளான உழைக்கும் மக்களை உற்சாகப்படுத்த கைத்தொழில், கடற்றொழில், விவசாயம், விலங்குவேளாண்மை, தென்னை பனை வளம், உட்கட்டுமாணம், தொழிநுட்பம், மாற்றுச் சக்திப் பயன்பாடு, உணவு பதனிடல் தொடர்பான போட்டிகள், வட்டங்கள் கோட்டங்கள் ரீதியாக நடாத்தப்பட உள்ளன.

நீச்சல், பாய் மரம் ஓட்டல், துடுப்பு வலித்தல், வலை பின்னுதல், கயிறு புனைதல், துலா மிதித்தல், உழுதல், வண்டிச் சவாரி, நிலம்கொத்துதல், புதிய வகை உணவு தயாரிப்பு, பனை மரம் ஏறுதல், குட்டான் இழைத்தல், கிடுகு பின்னுதல், அதிக பதநீர் உற்பத்தி, வீட்டுத் தோட்டச் செய்கை, நல்லின கால்நடை வளர்ப்பு. குளம் வாய்க்கால் வீதி திருத்தம் ஆகிய போட்டிகல் வட்ட, கோட்ட, மாவட்ட மட்டத்தில் தமிழீழத்தில் இடம் பெறுவதாகவும் மேலதிக விபரங்களை வட்ட கோட்ட உற்பத்திக் குழுச் செயலகங்களிலும் அரசியல் துறை செயலகங்களிலும் அறியலாம் எனவும் அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

**SUNRISE** குளிர் பானங்கள் கோடியல்கள்
❋ சுத்தமானவை ❋ சுவையானவை
தயாரிப்பும் விநியோகமும்
**SIVA INDUSTRIES**
*35/3 COLOMBOGAM ROAD, CHUNDIKULI*
(சி-6386)

---

முகூர்த்த வேளையில்,

எமது கனிஷ்ட புத்திரன்
திருவளர் செல்வன்
**சிவலோகநாதன்**
அவர்களுக்கும்

❋

எமது புதல்வி
திருநிறை செல்வி
**சந்திரகலா**
அவர்களுக்கும்

திருமணம் நடைபெறும் என்பதை உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

திருமணம் நிகழும் மண்டபம்: கலையரசர் மண்டபம்
15, Rue Sainte Marguerite. 93500 - Pantin, France.
(Mo: Aubervilliers 4 Chemins)

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி கனகசபை
புங்குடுதீவு - 10.

திருமதி ஞானவடிவேல்
புங்குடுதீவு - 11.

தகவல்: திரு. திருமதி மோகனசுந்தரம் மகாலெட்சுமி
(சி-6392)

---

உ
வண்ணார்பண்ணை அன்னசத்திர ஒழுங்கை
**வேம்படி ஸ்ரீ சித்திவிநாயகர்**
ஆலய வருடாந்த உற்சவ இறுதிநாளாகிய
இன்று (10-04-93) இரவு

## நிகழ்ச்சிகள்

நியூ சுபமாலா மோட்டோர்ஸ் ஆதரவில்
**ஸ்ரீதேவி**
**வில்லிசைக் குழுவினரின்**
வில்லிசை நிகழ்ச்சியும்

ஸ்ரீ அமலா ஜுவல்லர்ஸ் ஆதரவில்
**அருணா**
**இசைக் குழுவினரின்**
இன்னிசை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

இங்ஙனம்
ஆலய நிர்வாக சபையினர்
(4662)

---

யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திக்காக உயர்தர மாணவர் மன்றம் நடாத்தும்

## "கலை விழா"

இடம்: யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலய திறந்த வெளி அரங்கு
காலம்: 10-04-1993 சனிக்கிழமை பி. பகல் 5 மணி
தலைவர்: திரு. க. பேரம்பலம் (கொத்தணி அதிபர்)
பிரதம விருந்தினர்; திரு. பொ. வீரபத்திரன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், சாவகச்சேரி)
சிறப்பு விருந்தினர்கள்:
திரு. இ. கணேசன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி கல்விக் கோட்டம்.)
திரு. இரா. கைலநாதன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி கல்விக் கோட்டம்.)
திரு. எஸ். பத்மநாதன் (பிரதம நிர்வாக அதிகாரி, தென்மராட்சி கல்விக் கோட்டம்.)

இதில் தென்மராட்சி விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.

குறிப்பு: நுழைவாயில் சீட்டு மண்டப வாயிலில்.

(4658) உயர்தர மாணவர் மன்றம்

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.